ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2144/60 - 2019 ඔක්තෝබර් මස 11 වැනි සිකුරාදා - 2019.10.11

*2144/60 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

*ச.வ.பி. 9/73* (xii).

***(469 ஆம் அத்தியாயமான) தாவர, விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம்***

*2 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளை*

*(469 ஆம் அத்தியாயமான) தாவர, விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, சுற்றுலாத்துறை அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சர் ஜோன் அந்தனி இம்மானுவெல் அமரதுங்க ஆகிய நான், இதற்கான அட்டவணையில் விவரிக்கப்பட்ட காணி இடப்பரப்பை, மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் நோக்கங்களுக்காகச் சரணாலயமொன்றாகவுள்ளதென இக்கட்டளை மூலம் வெளிப்படுத்துகின்றேன் என்பதுடன், அத்தகைய சரணாலயம் “பெரிய பாசஸ் மற்றும் சிறிய பாசஸ் கடல்சார் சரணாலயம்” என அறியப்படுதல் வேண்டுமென மேலும் வெளிப்படுத்துகின்றேன்.*

*ஜோன் அந்தனி இம்மானுவெல் அமரதுங்க,*
*சுற்றுலாத்துறை அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும்*
*கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சர்.*

*கொழும்பு.*

1A - PG 4686 — 517 (2019/10)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## *அட்டவணை*

### *பெரிய பாசஸ் மற்றும் சிறிய பாசஸ் கடல்சார் சரணாலயத்தைக் கொண்டுள்ள காணி இடப்பரப்பின் எல்லைகள்*


*தென் மாகாணத்தின் அம்பாந்தோட்டை நிருவாக மாவட்டத்தில் திஸ்ஸமஹாராம பிரதேச செயலாளர் பிரிவினுள் அமைந்துள்ளதும் பரப்பளவில் 67282.3 ஹெக்டெயர்களைக் கொண்டதுமான அக்காணி இடப்பரப்பு அடங்கலும் ; அத்துடன் இது, நிலஅளவைத் திணைக்களத்தின் 1:50,000 என்ற நிலப்பட விகிதத்துக்கிணங்க* SLD *99 ஆயத்தொலை முறைமையிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட* GPS *ஆயத்தொலைகளினால் பின்வருமாறு எல்லைப்படுத்தப்பட்டுள்ளது :*

***வடக்கு*** : *யால தேசியப் பூங்காவின் தெற்குக் கரையோரத்தில் பலட்டுபண ஆற்றில் அமைந்துள்ள ஆயத்தொலைகள்* E *119894* N *271528 என்பவற்றின் ஆரம்பப் புள்ளியிலிருந்து யால தேசியப் பூங்காவின் கரையோரக் கோட்டின் உயர் நீர்மட்டத்தின் அதிகபட்ச மட்டத்திலிருந்து 50.77 கிலோமீற்றர் தூரத்தினுள் வடகிழக்கு நோக்கி கரையோரக் கோட்டில் அமைந்துள்ள ஆயத்தொலைகள்* E *144898* N *302813 என்பன வரை ;*

***கிழக்கு*** : *கடைசியாகக் குறிப்பிடப்பட்ட புள்ளியிலிருந்து ஒரு நேர்க்கோடு வழியாக தென்கிழக்கு நோக்கி கடலில் அமைந்துள்ள ஆயத்தொலைகள்* E *142503* N *304841* E *140723* N *306348* E *139013* N *307797* E *137228* N *309542* E*134677* N *311779 என்பவற்றிலிருந்து வடக்கெல்லையில் கடைசியாகக் குறிப்பிடப்பட்ட புள்ளியிலிருந்து 15.9 கிலோமீற்றர் தூரத்தினுள் ஆயத்தொலைகள்* E *132999* N *313357 என்பன கடலில் அமைந்துள்ள புள்ளி வரை ;*

***தெற்கு*** : *கடைசியாகக் குறிப்பிடப்பட்ட புள்ளியிலிருந்து ஆயத்தொலைகள்* E *131432* N *311228* E *129917* N *309169* E *128450* N *307175* E *126894* N *305061* E *125577* N *303271* E *124283* N *301512* E *122679* N *299333* E *120989* N *297037* E *119467* N *294969* E *118128* N *293149* E *116484* N *290915* E *114999* N *288891* E *113168* N *286408* E *111423* N *284038* E *110015* N *282124* E *107866* N *279203 என்பன மேற்கு நோக்கி கடலில் அமைந்துள்ள புள்ளிவரை, மற்றும் அங்கிருந்து கிழக்கெல்லையில் கடைசியாகக் குறிப்பிடப்பட்ட புள்ளியிலிருந்து 64.8 கிலோ மீற்றர் தூரத்தினுள் ஆயத்தொலைகள்* E *103727* N *257133 என்பன அமைந்துள்ள புள்ளி வரை ;*

***மேற்கு*** : *கடைசியாகக் குறிப்பிடப்பட்ட புள்ளியிலிருந்து ஆயத்தொலைகள்* E *105531* N *257079 என்பன வடக்கு நோக்கி ஒரு நேர்க்கோடு வழியாக 1.8 கிலோ மீற்றர் தூரத்தினுள் கடலில் அமைந்துள்ள புள்ளிவரை, அங்கிருந்து ஆயத்தொலைகள்* E *105864* N *259086* E *106214* N *261192* E *107951* N *271667 என்பன கிழக்கு நோக்கி கடலில் அமைந்துள்ள புள்ளிவரை, அங்கிருந்து கடைசியாகக் குறிப்பிடப்பட்ட புள்ளியிலிருந்து ஒரு நேர்க்கோடு வழியாக ஆயத்தொலைகள்* E *110313* N *271648* E *113122* N *271626* E *116007* N *271603* E *118430* N *271601 என்பன வடக்கு நோக்கி அமைந்துள்ள புள்ளி வரை, அங்கிருந்து ஆயத்தொலைகள்* E *142503* N *304841 என்பன யால தேசியப் பூங்காவின் கரையோரக் கோட்டின் உயர் நீர்மட்டத்தில் அமைந்துள்ள ஆரம்பப் புள்ளி வரை. (மேற்கெல்லையின் ஆரம்பப் புள்ளியிலிருந்து ஆரம்பப் புள்ளி வரையிலான எல்லா ஆயத்தொலைகளும் 26.7 கிலோ மீற்றர் தூரத்தினுள் அமைந்துள்ளன).*






இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.